DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.306/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மகேஷ்வரி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | ராஜேந்திரன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2025

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் வளையார்பாளையத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி ராஜேந்திரன் எனது கணவர். சுப்பிரமணி எனது கணவரின் அண்ணன். ஆஜர் எதிரி எனது கணவரின் அண்ணன் மகன் ஆவார். எனது மாமியாரின் பெயரில் 4 ஏக்கர் நிலம் பொய்கைப்புத்தூர், வளையார் பாளையத்திற்கு இடையில் சுடுகாடு அருகே உள்ளது. அந்த நிலத்தை எனது மாமனார் உயிருடன் இருந்த காலத்தில் இருந்து நாங்கள் தான் பாடுபட்டு வருகிறோம்.

2. அப்போது அந்த சமயத்தில் எதிரி சென்னையில் இருந்தார். எதிரியின் அம்மா திருச்சியில் இருந்தார். சுமார் 3, 4 வருடங்களுக்கு முன்பு எங்களுடன் வந்து சித்தலவாயில் குடியிருந்து வருகிறார்கள். 10.01.2023 ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும், எனது கணவர் ராஜேந்திரன் எனது மச்சான்டர் சுப்பிரமணி ஆகியோர்கள் அந்த இடத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தோம். அப்போது எதிரி ஏன் இந்த இடத்தை சுத்தம் செய்கிறாய் என்று எங்களைப்பாத்து அசிங்கமாக பேசினார். பேசிக்கொண்டு இருக்கும் போது உள்ளே வந்தால் வெட்டிவிடுவேன் என்று எதிரி கூறினார்.

3. எண்டா சொல்லச்சொல்லக் கேட்காமல் எதுக்குடா இருக்கிறா என்று எதிரி என்னை பார்த்து கேட்டார். பேசிக்கொண்டிருக்கும் போது எதிரி அரிவாளால் எனது கணவரை நெற்றியில் வெட்டிவிட்டார். பின்பு வலது பக்கமண்டையில் வெட்டிவிட்டார். எனது கணவர் தேக்கியபோது அவரதுவலது கை ஆட்காட்டி விரலில் வெட்டிவிட்டார். நான் சென்று தேக்கிய போது எனது வலது கை கட்டைவிரல், இடது கை மோதிரவிரலிலும் அரிவாளால் வெட்டிவிட்டார். சுப்பிரமணி தேக்க வந்த போது அவரை எதிரி காலாலல் எட்டி உதைத்து தள்ளிவிட்டார்.

4. நான் கத்திக்கொண்டிருந்தேன் என்னுடன் வேலைக்கு வந்த சரவணன் , ரவி ஆகியோர்கள் போக்குவரத்து வண்டி மூலம் குளித்தலை GH க்கு என்னையும் எனது கணவரையும் கூட்டிச்சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் அரிவாளால் தான் என்னையும் எனது கணவரையும் வெட்டிய அரிவாளாகும். **அரிவாள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நானும், எனது கணவரும், கணவரின் அண்ணனும் இருந்தோம். எனது மாமியார் பெயர் பார்வதி ஆகும். அவரது பெயரில் 4 ஏக்கர் நிலம் உள்ளதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணம் எதையும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி ரமேஷ்ன் தந்தை நடேசன் என்பவர் ஆவார் அவர் எனது கணவரின் அண்ணன் ஆவார். எனது கணவரின் அண்ணன் நடேசன் என்பவர் ராணுவத்தில் பணிபுரிந்தார்.

2. எனது கணவர் அண்ணன் நடேசன் ராணுவத்தில் சிறப்பாக பணி புரிந்ததற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலம் தான் அந்த 4 1/2 ஏக்கர் நிலம் என்றாலும் அது அவரது பெயரில் உள்ளது என்றால் சரிதான். நடேசன் திருச்சியில் இருந்த போது நாங்கள் அந்த நிலத்தை பயன்படுத்தினோம் என்றால் சரிதான். எதிரி ரமேஷ் அவரது அப்பா இறந்தபிறகு சித்தலவாயில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். ரமேஷ் அவரது அப்பா இறப்பிற்கு பிறகு அந்த நிலத்தை ரமேஷ் தான் பயன்படுத்துவேன் என்றும் நீங்கள் பயன்படுதத

வேண்டாம் என்று சொன்னார்ள ன்றால் சரிதான். அதன் பிறகு அவர் பயன்படுத்தி வந்தார் என்றால் சண்டைக்கு பிறகு தான் அவர் பயன்படுத்தி வருகிறார்.

3. எதிரியின் அப்பா இறந்த பிறகு 4 1/2 ஏக்கரில் எதிரி ரமேஷ் தான் பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த இடம் முழுவதும் தரிசு முள்காடு என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான் மருத்துவமனையில் தெரிந்த ஒரு ஆண்நபரும், தெரிந்த ஒரு பெண் நபரும் அரிவாளால் தாக்கியதாக நானும் எனது கணவரும் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான் அப்போது எதிரியின் அம்மா இருந்தார் அதை போலிசார் விசாரணையிலும, புகார் வாக்குமூலத்திலும் இருந்ததை சொல்லியுள்ளேன்.

4. ரமேஷ் அம்மா பெயர் ராஜம்மாள் அவருக்கு வயது 70 வயதிருக்குமா என்றால் இருக்கும். சம்பவ இடத்தில் நான் சொல்வது போல் எதிரி ரமேசும் அவரது அம்மாவும் இல்லையென்றால் சரியல்ல. ரமேசின் அப்பா நடேசனுக்கு ராணுவத்தில் வழங்கிய நிலத்தில் அனுபவம் செய்து வந்து ரமேஷ் கேட்டு கொண்டு அவருக்கு விட்டுவிட்டு ரமேசின் அனுபவத்தில் உள்ள நிலத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்கு நானும், எனது கணவர், மச்சாண்டர் ரமேசிடம் வீண்தகராறு செய்தே போது முள்காட்டில் விழுந்து நாங்களே காயம் ஏற்படுத்திக்கொண்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. சரவணன் சாட்சிகள் எனது கணவரின் அண்ணன் மருமகன் ஆவார். ரவி எனது கணவரின் அக்கா மகன் ஆவார். மதன்குமார் என்னுடைய மகன் ஆவார். இந்த அரிவாள் போலிசார் கேட்டுக்கொண்டதால் நாங்களே கொடுத்தது என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்து விடுவித்தபிறகு வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. ஒரு தடவை விசாரித்தார்கள். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும நடக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டு அவர்களாகவே எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 18:11:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.